# இலங்கை இனப்பிரச்சினையும் இலங்கை - இந்திய தந்திரோபாய உறவும் (2002 - 2009)

கே. ரீ. கணேசலிங்கம்

**ஆய்வுச்சுருக்கம்**

2020 ஆம் ஆண்டு உலக வல்லரசாக எழுச்சியடையும் தொலைநோக்குடன் அரசியல், பொருளாதார, இராணுவ உபாயங்களை வகுத்துவரும் நாடு இந்தியா. அத்தகைய தொலைநோக்கென்பது போட்டித்தன்மையூடாக வெல்வது ஒன்றாகவும், உலக வல்லரசுகளோடு இசைந்து அத்தகைய இடத்தை வெல்வது இன்னொன்றாகவும் அமைந்துள்ளது. இத்தகைய பாரிய இலக்குடன் போராடும் இந்தியாவுக்கு இலங்கை இனப்பிரச்சினை அதிக சவாலானதாக அமைந்து வருகிறது. இது இந்தியாவின் வல்லரசாக எழுவதற்குத் தடையாக உள்ளதெனப் புரிதல் இன்னோர் அசாத்தியமான பார்வையாகும். மறுபக்கத்தில் இலங்கையின் இனப்பிரச்சினையில் தலையிட்டு அதிகமான நெருக்கடியை இந்திய அரசியலில் எதிர்கொண்டது. போரும் சமாதானமும் நிகழ்ந்த 2002 - 2009 காலப்பகுதிக்கான அரசியல் உள்நாட்டிலும் பிராந்திய மற்றும் சர்வதேச மட்டத்திலும் முனைப்பான அரசியல் இராணுவ தளம்பலுக்கு இட்டுச்சென்றது. சுதந்திர இலங்கையின் வரலாறு முழுவதும் இலங்கை - இந்திய உறவு முறுகலும் மோதலும் முரண்பாடும் எனத் தளம்பலாகவே காணப்பட்டது.

**திறவுச்சொற்கள் :** தந்திரோபாயம், அரசியல் கலப்பு, உயர் பாதுகாப்பு வலயம், தன்னாட்சி அதிகார சபை, சுனாமி பொதுக் கட்டமைப்பு, கூட்டுரோந்து.

## 1. அறிமுகம்

இக்காலப்பகுதி இலங்கை - இந்திய உறவானது நெருக்கடியான காலப்பகுதியாகவே அமைந்திருந்தது. காரணம் விடுதலைப் புலிகளுடனான இலங்கை அரசின் சமாதான முயற்சியை அங்கீகரிக்காத இந்தியாவும் புதிய உலக ஒழுங்கினால் நிலைகுலைந்திருந்த இலங்கையின் பொருளாதாரமும் உள்நாட்டில் பிரதமர் - ஜனாதிபதி முறுகலும் ரணில் விக்கிரமசிங்காவின் மேற்குலகுடனான நட்புறவும் இந்தியாவில் பாரதீய ஜனதா காங்கிரஸ் ஆகியவற்றின் அணுகுமுறைகளும் என அதிக முரண்பாட்டு சக்திகளின் காலமாக அமைந்திருந்தது. இவ்வாய்வானது இலங்கை - இந்திய உறவு சார்ந்த விடய ஆய்வு முறைகளைக் கொண்டது. இதன் பரப்பு முழுவதும் அரசியல் வரலாற்றை கூறுவதாக அமைந்துள்ளது. அவதானிப்புகளும் சம்பவங்களும் முதன்மைப்படுத்தப்பட்டுள்ள ஆய்வானது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான 2002 தொடக்கம் 2009 இற்கும் இடைப்பட்ட காலத்தைப் பற்றிய உறவு நிலையைப் பதிவுசெய்ய முயலுகின்றது.

## சமாதான அரசியலும் இலங்கை - இந்திய உறவும்

கட்டுநாயக்கா விமானத்தாக்குதல், ஆனையிறவுத் தளம் மீதான தாக்குதல் என்பன 2002 ஆம் ஆண்டு அரசியல் ரீதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்துக்குமான பேச்சுவார்த்தைக்கு மூலகாரணமாக அமைந்திருந்தது. கட்டுநாயக்கா விமான நிலையம் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதல் அமெரிக்காவை மட்டுமல்ல இந்தியாவையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது அந்தச் சந்தர்ப்பத்தில் வோசிங்டன் வெளிப்படையாகவே "சிறிலங்கா அரசாங்கம் வன்னி மீதான விமானத்தாக்குதல் நிறுத்த வேண்டும். அங்கு கொல்லப்படுவது பொது

மக்களே" (கணேசலிங்கம்: 2006) என்று கூறியது. இவ்வேளையில் இந்திய வெளி விவகாரச் செயலாளர் ஊடகங்களை சந்திக்கும் போது விடுதலைப்புலிகளையோ அவர்கள் கட்டுநாயக்கா மீதான தாக்குதலையோ கண்டிக்கவில்லை. அதுமட்டுமல்ல அத்தகைய கேள்விகளுக்கு பதிலளிப்பதில் கரிசனை காட்டாது செயற்பட்டார். அமெரிக்காவின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட இந்தியா தந்தி ரமாக செயற்பட்டது.

வெளிப்படையாக முதன்மைப்படுத்தும் விடயம் இலங்கை - இந்திய அரசியல் உறவு புவிசார் நிலையில் தனித்துவமானது. இலங்கைக்கு ஒரே அயல்நாடு இந்தியா. குறிப் பாக கொலன்னாவ எண்ணெய் நிலைகள் மீதான தாக்குதலின் பின்பான மூன்று வாரத்தில் இ;ப்பிற்கான மாற்றீட்டினை இந்தியா இலங் கைக்கு செய்து கொடுத்ததோடு கட்டுநாயக்கா விமானநிலையம் மீதான தாக்குதல் நடந்து அடுத்த மூன்று மணித்தியாலத்தில் மாற்று வழியினை இந்தியா செய்து கொடுத்திருந்தது. (Begum,:2008). இது மிக நீண்டகாலமாக நிகழ்ந்து வரும் இந்தியாவின் அரசியல் உபாயமாகும். இலங்கையின் உள்நாட்டு அரசியல் நெருக்கடியினைப் பயன்படுத்தி பொருளாதார இலாபத்தினை அடைய இந்தியா எடுத்த ஒவ்வொரு விடயத்திலும் ஐ.தே.மு அரசாங்கம் மேற்குலகுடன் இணை ந்து கொண்டு செயற்பட விரும்பியது. இந்தி யாவை ஜே.ஆர் பின்பற்றிய அதீதமான அலட் சிய அணுகுமுறையையோ, பிரேமதாசா பின்பற்றிய அதீத உணர்ச்சிவசப்பட்ட அணுகுமுறையையோ ரணில் விக்கிரமசிங்கா தெரிவு செய்யாது மிகத் தந்திரமாகவும், நாசூக் காகவும் விட்டுக்கொடுப்பற்ற உபாயத்துடன் இந்தியாவைக் கையாண்டார் (Liyanaarachchi,2003) ரணில் விக்கிரமசிங்காவும் அப்போதைய வெளிவிவகார அமைச்சராகப் பணியாற்றிய டிரோன் பர்னாண்டோவும் குறிப்பிடத்தக்க வழிமுறைகளைப் பின்பற்றி இந்தியாவைத் தந்திரமாகப் பயன்படுத்த முயன்றனர்.

2002 ஆம் ஆண்டு ஆட்சிக்கு அமைத்த போது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பிரதான வெளிநாட்டுக்கொள்கை இந்தி யாவைக் கையாள்வதும் மேற்குலகுடன் ஒத்துழைப்பதுமாக அமைந்திருந்தது. ஐ.தே.க. மரபு சார்ந்த கொள்கையில் இந் திய எதிர்ப்புவாதம் தனித்துவமானது. அத னையே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கடைப்பிடித்தது. ஆனால் வெளிப்படையாக இந்தியாவை எதிர்க்காது உள்ளார்ந்த ரீதியில் மேற்குடனான விசுவாசத்தை அதிகம் காட்ட முயன்றதுடன் மேற்கு - இந்திய நெருக்கம் ரணில் விக்கிரமசிங்காவின் வெளியுறவுக் கொள்கைக்கு உந்துதலைக்கொடுத்தது.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான பொருளாதார உறவுகூட அரசியல் கலப்புடைய உறவாக அமைந்திருந்தது. 1995 களுக்கு முன்னர் இலங்கையின் பாரிய இறக்குமதிப் பங்களிப்பு வாங்கிய நாடாக ஜப்பான் காணப்பட்டது. இது 2001 க்குப் பின்னர் அதாவது இலங்கை - இந்திய தடையற்ற வர்த்தக உடன்படிக்கைக்குப் பின்னர் முற்றாக மாறிவிட்டது (Post - FTA - Free Trade Agrement). இது தொடர்பாக ஐ.தே.மு அரசாங்கம் ஆகஸ்ட் 2003 இல் ஓர் அறிக்கையினை வெளியிட்டது. இதில் இந்தியா இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக ஒத்துழைப்பு நாடு என்றும் மிக உயர்வான சத விகிதத்தில் இலங்கைக்கு இறக்குமதி செய்யும் நாடாக உள்ளதென்றும் குறிப்பிட்டுள்ளது (Liyanaarachchi,2003). இதனால் ஜப்பான் ஓரங்கட்டப்பட்டது மட்டுமல்ல இலங்கையின் சிறுகைத்தொழில் முயற்சிகள் முற்றாக பாதிக்கவைக்கும் வகையில் இந்திய உற்பத்திப்பொருட்கள் இலங்கைச் சந்தையில் குவியும் நிலையை ஏற்படுத்தியது. இதனால் இலங்கைக்கு ஏற்பட்ட இ;ப்பு ஏறக்குறைய 837 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். இதில் ஏற்றுமதியால் மட்டும் 169.2 மில்லியன் அ.டொ. இழப்பு ஏற்பட்டது. இதனால் இந்தியாவிற்கு வர்த்தக ரீதியான 667.8 மில்லியன் அ.டொ இலாபமாகக் கிடைத்தது (Liyanaarachchi,:2003). இதற்கான

அடிப்படைக் காரணம் அரசியல் ரீதியானது என அக்கட்டுரையின் ஆசிரியர் லியனாராட்சி குறிப்பிடுகின்றார்.

ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கம் உள் நாட்டுப் பொருளாதாரத்தைச் சரிசெய்ய சமாதானப் பேச்சுவார்த்தைகளைப் பயன் படுத்த முயன்றது. ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை விடுதலைப்புலிகள் அமைப்பை அது நிராகரித்ததுடன் அவ் வமைப்புடனான பேச்சுவார்த்தையை முற்றாக எதிர்த்தது. விடுதலைப்புலிகள் மீதான தடையை (24.09.2002) இலங்கை அரசாங்கம் நீக்கியதற்காக இந்து பத்திரிகை 'அது ஓர் விவேகமற்ற செயல்' எனக் கண்டனம் தெரிவித்தது. போர் நிறுத்த உடன்படிக்கையை வெளிப்படையாக இந்தியா நிராகரித்தது. இத்தகைய சூழலில் ரணில் விக்கிரமசிங்காவின் நடவடிக்கைகள் இலங்கையின் இந்தியா பொறுத்த வெளியுறவுக் கொள்கையின் தந்திரோபாயமாக அமைந்தது.

ரணில் விக்கிரமசிங்கா பதவியேற்றதன் பின்பான வெளிநாட்டு விஜயத்தினை (2001.12.23) இந்தியா நோக்கியதாக ஆரம் பித்தார். அவரது விஜயத்தின் போதெல்லாம் அப்போதைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய், எதிர்கட்சித் தலைவர் சோனியா காந்தி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் பதில் பிரதமரான அத்வானியைச் சந்தித்து உரையாடுவது வழமையாக இருந்தது. ரணில் அத்வானியைச் சந்திக்க ஒருபோதும் தவறவில்லை. காரணம் அத்வானி தீவிர வலதுசாரி என்றும் அமெரிக்க சார்புக் கொள்கையுடையவர் என்பதாலும் (Liyanaarachchi,2003) மேலும் புதுடில்லிக்கு விஜயம் செய்வதோடு கர்நாடக, கேரளா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழ்நாடு எனத் தென் மாநிலங்களுக்கும் அரசமுறைப் பயணத்தினை மேற்கொள்வார். ஏற்கனவே சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கத்தின் கீழ் இந்தியாவுடன் ஏற்பட்ட பொருளாதாரத் தடையற்ற வர்த்தக உடன்படிக்கையின் பிரகாரம் இந்தியா தென் மாநிலத்தவருடன் நெருக்கமான வர்த்தகப் பரிமாற்ற உறவு வளர்ந்திருந்தது. இதனை ரணில் விக்கிரம சிங்காவும் பேண வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாததாக அமைந்திருந்தது. அதனைக் கருத்திற் கொண்டு இந்தியாவுக்குச் சாதகமாக ஒத்துழைக்கும் நடவடிக்கையில் ரணில் ஈடுபட்டார். 2008 யூன் 08 இல் இந்தியாவுக்கு அரசமுறைப்பயணத்தினை மேற்கொண்ட ரணில், வாஜ்பாய் அரசாங்கத்துடன் திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதத்தொகுதியில் சில எண்ணெய்க் குதங்களை இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு குத்தகைக்குவிடும் உடன்படிக்கையில் ஒப்பமிட்டார் (Liyanaarachchi,:2003). மேலும் வருடாந்த இந்திய - இலங்கை வெளிவிவகாரச் சந்திப்பு மாநாட்டில் சில குறிப்பிடப்பட்ட விடயங்களில் ஒத்துழைப்பதென இந்தியா முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை சம்மதித்தது. குறிப்பாக வர்த்தகம், முதலீடு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, போக்குவரத்து, மக்கள் சேவை, மின்சக்தி மற்றும் சேவைத்துறைகளில் உடன்பாடு எட்டப்பட்டது (Perera, 2003). மேலும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கொழும்பின் புறநகர்ப்பகுதிகளில் உயர்மின்பிறப்பாக்கிகளை அமைப்பதற்கு நிலத்தினை வழங்கியுள்ளது. அவ் உடன் பாடும் அடுத்துவரும் 99 வருடத்திற்கு இந்தியாவுக்கு உரிமையுடையதாக (Liyanaarachchi,2003) எழுதப்பட்ட உடன்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்மின்பிறப்பாக்கிகளில் இருந்து ஏறக்குறைய 300 மெகாவாட் மின்வலுவை உற்பத்தி செய்யும் உரிமத்தையும் இந்தியா பெற்றுள்ளது. இலங்கை அரசாங்கம் பொருளாதார அடிப்படையில் இந்தியாவுடன் ஒத்துழைப்பினை பேணிக்கொண்டது.

அடுத்து பாதுகாப்பு பொறுத்தும் சில அடிப்படைத் தேவைகளை அடைவதற்கு இந்தியாவுடன் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கை வழி அமைப்பதாக இருந்தது. இராணுவப் பயிற்சிகள், ஆயுதத்தளபாட உதவிகள்,

கடற்படைசார் ஒத்துழைப்புக்களையும் இந்தியாவுடன் பகிர்ந்துகொள்ள முயன்றனர். இந்தியாவும் மிக ஆரவாரிப்பின்றிச் செயற்பட விரும்பியது. குறிப்பாக வாஜ்பாய் அரசாங்கம் மிக அமைதியாக இலங்கை விடயத்தினைக் கையாண்டது. ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கத்தின் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையை முழுமையாக ஏற்றுக் கொள்ள மறுத்த இந்தியாவை வெளிப்படையாகவும் தந்திரமாகவும் கையாள வேண்டிய பொறுப்பு காணப்பட்டது. இந்தியாவை மீறாது செயற்படும் உபாயத்தினை ரணில் பின் பற்றினார்.

ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சிக்காலத்தில் "சேதுகால்வாய் விவகாரம்" பாரிய அரசி யல் - பொருளாதார - இராணுவ விடயமாக விளங்கியது. அச்சந்தர்ப்பத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்த ரணில் விக்கிரமசிங்கா சேதுகால்வாய் பற்றி எதுவுமே கூறாமல் தென்னிந்தியாவிற்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைப்பது, இரு நாடுகளுடனான கூட்டான கைத்தொழில், வர்த்தகம், தொழில்நுட்பம், ஒத்துழைப்பு ஆகிய தொடர்பு ஏற்பட வாய்ப்பு இருக்கும் எனப் புதுடில்லியில் தெரிவித்தார் (Begum,2008) இவ்வாறே இந்தியாவுடன் இலங்கைப் பாதுகாப்புப் பற்றிய உடன்பாட்டைச் சமப்படுத்த அமெரிக்காவுடனும் உடன்பாடுகளை எட்டிவந்தது. குறிப்பாக இலங்கையின் வடக்குக் கிழக்கின் துறைமுகங்களையும், வான்பரப்பினையும் அமெரிக்கா பயன்படுத்தலாமென ஓர் உடன்படிக்கையினை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் மேற்கொண்டது (Perera:2003). அத்துடன் அமெரிக்கக் கப்பல்கள் பல இலங்கையின் துறைமுகப் பகுதிகளில் வருகை தந்ததை அறிய முடிந்தது. இந்தியாவையும் அமெரிக்காவையும் மட்டுமன்றி சீனாவையும் வடக்குக்கிழக்குப் பிரதேசங்களில் செல்வாக்குச் செலுத்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் வெளியுறவுக்கொள்கை வாய்ப்பளித்தது. வடக்குக் கிழக்கு ஆழ்கடல் பகுதிகளில் சீனா மீன்பிடித்தொழிலை மேற்கொள்வதற்குரிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது பற்றிய சர்ச்சைகளில் பாராளுமன்றத்தில் ஐ.தே.மு. அரசாங்கம் கூறிய விடயம் நினைவுகோரத்தக்கது.

"இலங்கைக்கும் சீனாவுக்குமான உறவு பொருளாதார இராணுவ மட்டத்தில் பாரம் பரியம் மிக்கது. தேசிய பொருளாதாரத்திலும் தேசிய அபிவிருத்தியிலும் சீனாவின் உதவிகள் இலங்கைக்கு நீண்டகாலமாகக் கிடைத்துள்ளது. இலங்கையில் நிகழும் சமாதான நட்வடிக் கைகளில் தலைமைத்துவத்தையும் முக்கியத் துவத்தையும் சீன அரசாங்கத்திற்குத் தெரியப் படுத்தியுடன் சீனாவின் ஆதரவை எமது அரசாங்கம் கோரியிருந்தது"(Sunday Times,2003) இது பிராந்திய வல்லரசான இந் தியாவைக் கையாள்வதுடன் இந்தியாவின் ஆதிக்கம் மேலோங்காது இருக்கக்கூடிய வெளியுறவுக்கொள்கையை வரைந்து கொண்டது. அமெரிக்க - இந்திய நெருக்கத் தினையும் இந்தியாவின் வளர்ச்சியினையும் கருத்திற் கொண்டதுடன் 1987 ஐப் போன்ற பதிவுகளைத் தவிர்க்கவும் இந்தியாவுடன் இணங்கிப் போகும் போக்கினை இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்தது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பதவிக்கு வந்தபின்பு 27தடவை வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். இதில் 14 தடவைகள் இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ளார்.

#### புலிகள் மீதான தடை நீக்கம்

சமாதானப் பேச்சுக்களுக்கான முன்னா யத்தில் ஒன்றாகிய புலிகள் மீதான தடையை ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கம் நீக்க முடிவு எடுத்தது. *(04.09.2002)* விடுதலைப்புலிகள் மீதான தடை விலக்கப்படுமென பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன அறிவித்தார். அறிவிப்பு வெளியானதும்06.09.2002 அன்றைய இந்துப் பத்திரிகையின் ஆசிரிய தலையங்கத்தில் "அம்முடிபு தூரப்பார்வையற்ற முடிவு. சந்திரிகா குமாரதுங்கா பரிந்துரைத்தவாறு பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் கண்ட

பின்னரே தடையை நீக்குவது பற்றி பரிசீலிக்க வேண்டும் என வற்புறுத்தியது (The Hindu,2002) வடக்குக்- கிழக்கு புலிகளின் கட்டுப்பாட்டில் சென்றுவிடக்கூடா தன்பதில் அதிக கரிசனையை இத்தலையங்கம் வெளிப்படுத்தியிருந்தது. இதிலிருந்து இந்தியாவின் சமாதான அரசியல் பற்றிய அணுகுமுறையைப் புரிந்து கொள்ள முடியும்.

இந்தியாவுக்கு சமாதானப் பேச்சுவார்த்தை பற்றி நோர்வேயின் அணுகுமுறை மூலம் அவ்வப்போது தெரிந்து கொண்டது. நோர்வேயின் விசேட தூதுவரோ, அல்லது சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தலைமை தாங்குபவரோ இலங்கைக்கு வரத்தவறினாலும் புதுடில்லிக்குச் சென்று நடந்தவற்றை ஒப்புவிப்பது வழமையானதொன்றாகும். இதனால் அமெரிக்கா நோர்வே மூலமாக மேற்கொள்ளும் சமாதான நடவடிக்கையை இந்தியா ஆமோதித்ததுடன் தனது பங்கை அமெரிக்கா ஏற்றுள்ளதையும் புரிந்து கொண்டு செயற்பட்டது. வாசிங்டனில் அப்போதைய தெற்காசியாவுக்கான அமெரிக்க விசேட தூதுவர் ரிட்சட் ஆர்மிரோஜ் குறிப்பிடும் போது "இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவே தனது பங்கு எதுவென்பதைத் தீர்மானிக்க வேண்டும்" (கணேசலிங்கம், பக். 2006, ப.120) என்றார். அதுமட்டுமல்லாது இலங்கை விடயத்தினால் அமெரிக்காவுடனான உறவையோ நட்பையோ இந்தியா ஒருபோதும் இழக்கத் தயாராக இருக்கவில்லை. அவ்வாறே அமெரிக்காவும் இலங்கை விடயத்தில் இந்தியாவுடனான நெருக்கத்தை இழக்கத் தயாராக இருக்கவில்லை. பரஸ்பரம் இரண்டு நாடுகளுமே அத்தகைய உள்நோக்கங்களுடன் செயற்பட்டன. நோர்வையை அமெரிக்கா களத்தில் இறக்கியமைக்கு இதுவுமொரு காரணமாகும். இதனால் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், நோர்வே என்ற கூட்டு வலுவானதாக அமைந்திருக்க உதவியது. ஆனால் அன்றைய அரசாங்கம் தடையை நீக்கத் தவறியிருந்தால் விடுதலைப்புலிகளை பேச்சு மேசைக்கு இழுத்திருக்க முடியாது. அது சாத்தியப்பட வேண்டுமாயின் தடை நீக்கம் அவசியம் அதனோடு ஏனைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் சரி செய்யவும், திருத்திக் கொள்ளவும் தயாரானது.

**உயர்பாதுகாப்பு வலயம் (HSZ)**

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இராணுவம் நிலை கொண்டிருக்கும் சில பிரதேசங்களை இராணுவமே உயர்பாதுகாப்பு வலயம் என்ற முக்கியத்துவத்தின் மூலம் ஆக்கிரமித்து வருகின்றது. பொதுமக்களின் வாழ்விடங்களை மிக நீண்டகாலமாகத் தனது படைகளைத் தக்கவைக்கவும், அதற்கு பாதுகாப்பினை ஏற்படுத்தவும் அத்தகைய வலயம் ஒன்றை உருவாக்கி கையகப்படுத்தியுள்ளது. இது வடக்குக் கிழக்கின் மக்கள் வாழ்விடங்களைச் சுருக்கியுள்ளதுடன் நிரந்தரமான மக்கள் இடப்பெயர்வை சாத்தியப்படுத்தியுள்ளது. இது பற்றிய சர்ச்சையைத் தீர்த்துக் கொள்வதென புரிந்துணர்வு உடன்பாட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. பேச்சுவார்த்தை ஒவ்வொன்றிலும் கலந்துரையாடப்பட்டது. அதற்கென விசேட உபகுழுக்கள் அமைக்கப்பட்டு இராணுவ சூனியப் பிரதேசங்களில் சில சந்திப்புக்களும் நடந்துள்ளன. இது பேச்சுவார்த்தை முறிவடையத் தெரிவிக்கப்பட்ட காரணங்களில் ஒன்றாகவிருந்தது. இவ்விடத்தில் புதுடில்லியின் அணுகுமுறையை அவதானிப்போம்.

உயர்பாதுகாப்பு வலயத்திற்கான உரையாடல்களின் போது முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பூர்த்தியாகாத நிலையில் இந்திய இராணுவ ஆலோசனை கோரப்பட்டது. பேச்சுவார்த்தையிலிருந்து விடுதலைப்புலிகள் தற்காலிகமாக நிறுத்தியிருந்த நிலையிலேயே இந்திய முன்னாள் இராணுவ அதிகாரி லெப்னன்ட் ஜெனரல் சதிஷ் நம்பியார் இவ்வறிக்கையை வெளியிட்டார். அவரது அறிக்கைக்கு முன்னர் அவர் இலங்கைக்கு விஜயம் செய்ததுடன் வடக்கு - கிழக்கு

உயர்பாதுகாப்பு வலயங்களினைப் பார்வையிட்ட பின்னர் அவரது அறிக்கை வெளிவந்தது (Report of Nambiyar,2003).

1. உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து அல்லது பாதுகாப்பு முன்னரங்கிலிருந்து படைகள் விலகுவதனால் அதே நேரத்தில் புலிகளும் தமது இராணுவ நடவடிக்கை நிலைகளில் இருந்து விலகிக்கொள்ள வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இதற்கான இணக்கம் காணப்பட வேண்டும்.

2. புலிகளின் நெடுந்தூர வீச்சு ஆட்லறிகள் குறிப்பிட்ட இடங்களில் சர்வ தேச கண்காணிப்பில் இருக்க வேண்டும் படையினரோ, புலிகளோ தமது கட்டுப் பாட்டுப்பகுதிக்குள் இருந்து புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மாறாக தாக்குதல் நடத்த முயற்சி செய்கிறார்கள் என்ற சந்தேகம் எந்த ஒரு தரப்பினருக்கும் ஏற்பட்டாலும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக பரிசோதனை நடைபெற வேண்டும்.

3. பலாலி விமான நிலையம், காங்கேசன் துறை துறைமுகம், பருத்தித்துறை துறை முகம்ஆகியவை அடங்கிய உயர்பாதுகாப்பு வலய எல்லைகளை அந்தந்த இடத் தேவைக்கு ஏற்றபடி குறைக்கலாம் (The Island, 2004).

இதனை அவதானிக்கும் போது விடுதலைப்புலிகளையும், சிறிலங்கா அரசாங்கத்தையும் சமமாக மதிப்பிடு செய்யும் அணுகுமுறையொன்றைக் காணமுடிகிறது.

2002 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் தலைவர் அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் நினைவுப் பேருரை ஆற்றியபோது 'இந்து' ஆசிரியர்களில் ஒருவரான ராம் 'தமிழக அரசோ, இந்திய அரசோ, இனிமேல் இலங்கைத் தமிழருக்கு ஆதரவானதொரு போக்கைக் கடைப்பிடிக்கப் போவதில்லை' (The Hindu:2002) என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கம் என்பதிலிருந்து கவனம் திரும்பக்கூடிய விதத்தில் இந்தியப் பிரதமர் நடந்து கொண்டுள்ளார். (வாஜ்பாய் காலம்) பிரபாகரனை நாடு கடத்தும் கோரிக்கையைக் கொழும்பு அரசாங்கத்தின் வசதி கருதி ஒதுக்கி வைக்கக்கூடாது எனவும் இந்து தலையங்கம் தீட்டியிருந்தது (The Hindu,2002).

**இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை** (ISGA)

புதிய உலக ஒழுங்கின் அரசியல் பொருளாதாரமானது இனப் பிரச்சினைகளுக்கும், இனமுரண்பாட்டிற்கும் தற்காலிகமான இடைக்காலத்தீர்வுகளைமுன்வைத்து வருகிறது. அவ்வரைபுக்குள் யூகோஸ்சிலாவியா டார்பூர் (சூடான்) பாலஸ்தீனம் என்பன வெற்றிகரமான இடைக்கால ஆட்சிமுறைகளைக் காணமுடிகிறது. அதன் வழியில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தற்காலிக தீர்வொன்றை மேற்குலகம் முன்வைக்க ஆயத்தமானது. ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் ரணில் விக்கிரமசிங்காவும் தேர்தல் காலத்திலிருந்தே இடைக்கால நிர்வாகம் பற்றி தனித்துவம் மிக்க கருத்துக்களை முன்வைத்து வந்துள்ளது. (இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வும் உலகளாவிய சவாலும் 2003) இதனை அடிப்படையாகக் கொண்டு North-East Development Council (Apex body) என்பதனையும் இதற்கு மோசமான விமர்சனங்களை மேற்கினால் முன்வைத்தபோது Provincinal Adminis trative Structure என்ற இன்னோர் அமைப்பினை ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கம் முன்வைத்தது. இதனை முற்றாக விமர்சித்த விடுதலைப்புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை என்ற (Interim - self Goverment of Authority) வரைபை முன்வைத்தது. இது பற்றி ரணில் அரசாங்கம் எத்தகைய கருத்தையும் வெளியிடாது தவிர்த்ததுடன் தீவிரவாத தென் இலங்கை சக்திகள் முற்றாக நிராகரித்தன. இவ்வகை அரசியலுக்குள் மேற்கு நாடுகளின் கருத்து நிதானமான வரவேற்புக் கலந்த ஆலோசனைகளை முன்வைத்திருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளராகக் கடமையாற்றிய J.N டிக்சித் பின்வரும் கருத்தினை முன்வைத்தார்.

"இலங்கையின் இறைமையைப் பாதிக் கும் எந்த நடவடிக்கையை இந்தியா ஆதரிக்காது. வடக்கு கிழக்கு நிர்வாக அதிகாரம் முழுமையாக ஒரு தரிப்பிடம் செல்வது தனிநாட்டை ஒப்படைப்பதாக அமைந்து விடும். மேற்கு நாடுகளைவிட இலங்கையின் ஒருமைப்பாட்டைப்பற்றி இந்தியா கரிசனையுடன் செயற்படும் (The Hindu, 2005). என்றார். இடைக்கால வரைபு தனிநாட்டுக்கான அங்கீகாரமென்ற கருத்தினை 'இந்து' பத்திரிகை வெளியிட்டதுடன் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கருத்தினை ஆதரித்தது.

**பொதுக்கட்டமைப்பு**

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த பின்பு ஏற்பட்ட அழிவுகளைச் சரிசெய்வதற்குரிய உதவிகளையும், நிதியினையும் வடக்கு கிழக்கில் பயன்படுத்த ஏற்படுத்தப்பட்ட உடன்பாடே பொதுக்கட்டமைப்பாகும். இதில் இந்தியாவின் தொடர்பான அணுகுமுறையே அவதானிக்கப்பட வேண்டும். அப்போது இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராக நட்வர்சிங்கும், அதன் செயலாளராக ஷியாம் ஷரனும் காணப்பட்டனர். விடுதலைப்புலிகள் மட்டுமன்றி வட- கிழக்கிலுள்ள அனைத்துக்கட்சிகளும் இணைந்த பொதுக்கட்டமைப்பை உருவாக்க வேண்டுமென இந்தியா வலியுறுத்தி வந்தது (கணேசலிங்கம்;திருக்குமரன்,2006) அது மட்டுமல்ல பொதுக்கட்டமைப்பு உடன்பாடு எட்டப்போகின்றது என்ற சந்தர்ப்பத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு அரசமுறை விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அவரோடு வெளிவிவகாரச் செயலாளர் வருகை தந்ததோடு அவர் அதற்கு முன் பல தடவை பொதுக்கட்டமைப்புப் பற்றி கருத்து வெளியிட்டார். எல்லாச் சந்தர்ப்பத்திலும் நிராகரிப்பினையே கொண்டிருந்தார். நட்வர் சிங் முதலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரையும் பின்பு வடகிழக்கில் இயங்கிய ஆயுதக்குழுவையும் சந்தித்து பொதுக்கட்டமைப்பைப் பற்றி உரையாடினார். பின்னர் ஜே.வி.பி. தரப்பையும் சந்தித்து உரையாடி எதிர்ப்பு நிலையை ஊக்குவித்தார். இறுதியாக அரசாங்கத்தையும் கண்துடைப்புக்குதமிழ்கூட்டமைப்பினரையும் சந்தித்தார். இந்த சந்திப்பின் ஒழுங்குபடுத்தல் கூறும் செய்தி இந்தியா எதனை விரும்புகின்றதென்பது தெளிவாகிறது. (The Hindu: 2005) உலக நாடுகளின் நிதி உதவிக்காகவும் நிர்ப்பந்தத்துக்காகவும் அடிபணிந்த சந்திரிகா குமாரதுங்காவால் எட்டப்பட்ட பொதுக் கட்டமைப்பு உடன்பாடு அமுலாக்கப்படாது இறந்து போனது.

**ஆயுத விநியோகம்**

இலங்கை இராணுவத்திற்கு இந்தியா ஆயுத விநியோகம் மேற்கொள்வது தொடர்பாக பின்பற்றிவரும் கொள்கையை விளங்கிக் கொள்வது அவசியமானது. இலங்கையில் 2006 இல் இலங்கையின் சமாதான முயற்சிகள், சவால்கள், வாய்ப்புக்கள் என்பன தொடர்பான தொனிப்பொருளில் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக இலங்கை விவகாரம் தொடர்பான பேராசிரியர் சகாதேவன் ஆற்றிய உரையினைச் சுருக்கம் வெளிப்படுத்தும் விடயம்:

1. பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று இரண்டு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திட வாய்ப்பில்லை. காரணம் இராணுவச் சமநிலையைக் குழப்பும் பட்சத்தில் எதிர்மாறான விளைவுகள் ஏற்படலாம். இலங்கை அரசாங்கம் சமாதான பேச்சு வார்த்தையில் அக்கறையின்மையை அதிகம் வெளிப்படுத்தும் என்பதால்.

2. இலங்கை சமாதான முயற்சிக்கு இந்தியா தாக்கம் செலுத்தும் சக்தியல்ல. மாறாக ஒரு காரணி மாத்திரமே.

3. இந்தியா நோர்வேயுடன் தன்னை இனங் காண்பித்து வருவதன் நோக்கம், தனது எல்லையை, மட்டுப்பாட்டைப் புரிந்து கொண்டுள்ளதால்.

4. இனப்பிரச்சினைக்கான தீர்வில் அதிகளவிலான அதிகாரப் பரவலாக்கலே உசிதமானதும் உறுதியானதுமான இந்திய எல்லை மட்டுப்பாடாகும்.

5. ஜனாதிபதி ராஜபக்சாவின் ஒற்றையாட்சித் திட்டம் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களிடம் வரவேற்பைப் பெறவில்லை.

6. இந்தியா வெளியிலிருந்து (மேற்கிடமிருந்து) திணிக்கப்படும் தீர்வு எதனையும் இனிமேல் ஆதரிக்காது.

7. தமிழர்களின் போராட்டத்திற்கு வெற்றி கிடைக்கும் பட்சத்தில் அல்லது அதிக அதிகாரப்பரவல் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் இந்தியாவிலும் அதன் தாக்கம் தென்படலாம்.

8. இனப்பிரச்சினைத் தீர்வென்பது ஜனநாயகம் மற்றும் பன்முகத்தன்மை என்பதில் புதுடில்லி தெளிவாகவுள்ளது.

9. சமாதான முயற்சிகள் குறித்த நோர்வேயிடமிருந்து இந்தியா அறிந்து வருகிறது. சிறுபான்மையினரின் நியாயபூர்வமான அபிலாசைகளை மதியுங்கள் என்ற செய்தியைக்கடும்போக்கானவர்களுக்கு புதுடில்லி உணர்த்துகிறது.

10. இலங்கை - இந்திய நட்புறவு பாதுகாப்புக் குறித்த கண்ணோட்டத்தில் மாற்றமடைந்து வருகிறது. இலங்கை இராணுவம் இந்தியாவை அனுகூலமான நட்பு நாடாகக் கருதத் தொடங்கியுள்ளது.

11. குறிப்பிடத்தக்க இராணுவ ஒத்துழைப்புள்ளது. புலனாய்வுத் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. கடற்படை கூட்டு நடவடிக்கைகள் அவ்வப்போது இடம் பெறுகின்றன. இருதரப்புக்கும் இடையில் உயர்மட்டத்தில் ஆழமான உறவுகள் நிலவுகிறது.

12. இனப்பிரச்சினையில் நேரடியாகத் தலையிடுவதில் புதுடில்லி அவதானமாக உள்ளது. எச்சரிக்கை கலந்த தடுமாற்றம் நிலவுகின்றது. ஏற்கனவே செய்த தவறைக் கொள்கை வகுப்பாளர் மீளச் செய்யத் தயக்கம் கொண்டுள்ளனர்.

13. இலங்கையின் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான விலை அதிகமாக இருக்கு மென புதுடில்லி கருதுகிறது. (The Hindu,2005)

**கடற்படை கூட்டுரோந்து**

இந்திய பாதுகாப்பு அமைச்சு, தமிழக அரசு, சிறீலங்கா அரசு என்பன கூட்டாக கடற்படை ரோந்து பற்றி அதிக பிரதிவாதங்களை வெளிப்படுத்தியிருந்தன. தமிழக மீனவர்களை சிறீலங்கா கடற்படைகளல்ல விடுதலைப் புலிகளே சுடுவதாகவும், கடத்துவதாகவும் தாக்குதல் நடத்துவதாகவும் இந்தியா குற்றம் சாட்டியது. (Ferdinando,2012) இதனால் தமிழக அரசின் முதல்வர் மு. கருணாநிதி மத்தியரசிடம் கூட்டுக் கடற்படை ரோந்தை மேற்கொள்ளுமாறு கோரியதோடு சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சும் அதற்கு ஒப்புதலளிக்க இறுதியில் மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சர் அந்தோனியோடு உரையாடி தேசிய பாது காப்புக் கருதி கூட்டு ரோந்து கைவிடப்பட்டது.

கூட்டு ரோந்து தனியான அரசியலையும் இராணுவ - கடற்படை உத்திகளையும் இலங்கை - இந்தியக் கடற்பரப்பில் அதிகரிக்கச் செய்துள்ளது. இந்தியக் கடற்படையின் ஆதிக்கம் இலங்கை - இந்தியக் கடற்பரப்பில் அதிகரித்ததோடு நவீன தொழில்நுட்ப சாதனங்களும், கண்காணிப்புக் கருவிகளும் இக்கடற்பரப்பில் குவிக்கப்பட்டுள்ளன. இந்தியா தென்கடல் பிராந்தியத்தை மேலும் தீவிரமான நேரடியான கண்காணிப்புக்குள் கொண்டு வந்துள்ளது. 2007 ஜீன் மாதத்தின் நடுப்பகுதியில் விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அணிமீதான தாக்குதலுக்கு இந்தியக் கடற்படையின் ஒத்துழைப்பே காரணமென நம்பப்படுகின்றது. விடுதலைப்புலிகளின்

ஆயுதக்கப்பல்கள், படகுகள்தகர்க்கப்படுவதற்கு முக்கிய பங்கினை இந்தியக் கடற்படையே மேற்கொண்டமை தெளிவாகியுள்ளது. இக்கடற்பரப்பில் மூன்றாவது கடற்படையின் பிரசன்னத்தை இந்தியா விரும்பவில்லை என்பதைப் புதுடில்லி பல தடவை வலியுறுத்தி வருகின்றது. (Mishra,2004). அம் மூன்றாவது கடற்படை விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் எனக் குறிப்பிட்டாலும் சீனாவின் கடற்படை பற்றியே இந்தியா அதிக கரிசனை கொண்டு செயற்படுவதாக சர்வதேசக் கடல் ஆய்வாளர்கள் குறிப் பிடுகின்றனர் (Mishra, 2004). சீனாவின் இந்து சமுத்திர ஊடுருவல் மேலும் அதிகரிப் பதோடு இலங்கையின் சீனாவின் ஆதிக்கம் அதிகரிப்பதாக அப்போது இந்தியா கருதியது.

இந்திய பாதுகாப்புச் செயலாளர் சி.ஆர். நாராயணன் 2007 ஜூனில் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்சவைச் சந்தித்த பின்பு இந்தியாவிடம் இலங்கை ஆயுதங்களைக் கொள்வனவு செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். இந்திய இராணுவத் தளபதிகள் அடிக்கடி கொழும்புக்கும் வடக்கு - கிழக்கு போர் முன்னரங்குகளுக்கும், முகாம்களுக்கும் விரைவதுடன் ஆலோசனையும் வழங்கியிருந் தனர். திருகோணமலைவிதிக்கு ராஜீவ்காந்தியின் பெயரைச் சூட்டுவது பற்றியும் வடக்கு கிழக்கில் கொல்லப்பட்ட 1700 இந்தியப்படைகளின் நினைவாக கொழும்பில் நினைவு மண்டபம் அமைப்பது பற்றியும் சமாதான காலத்தில் அதிகம் பேசப்பட்டது.

**மகிந்த ராஜபக்ச காலப்பகுதி**

புலிசார் அரசியல் பாரம்பரியத்திற்குள்ளும் இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள்ளும் இலங்கை அமைந்திருந்தது. இதனால் இந்தியா இலங்கை சார்ந்தும் இலங்கை இந்தியா சார்ந்தும் செயற்பட முனைந்தன. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அவ்வகை ஒத்துழைப்பில் அதிக ஈடுபாடு காட்டி வந்தது. இதில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவுக்கு பின்பு அதே ஒத்துழைப்பினை மகிந்த ராஜ பக்ச கொண்டிருந்தார். மகிந்த ராஜபக்சவின் பிரதமர் காலஆட்சிப்பகுதியில் இந்தியாவுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டவர். ஜனாதிபதியான துடன் முதல் வெளிநாட்டு விஜயம் இந்தி யாவை நோக்கியதாக அமைந்திருந்தது. (2005 டிசெம்பர் 25 - 30 வரை). அப்போது இந்தியாவுடன் பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டார். அதனை அடுத்து இந்திய ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்தார். இதன் அடிப்படையில் மிக நெருக்கமான புரிந்துணர்வு ஏற்பட ஆரம்பித்தது (Begum,2008) பொருளாதார வர்த்தக ரீதியில் பலமான ஒத்துழைப்பு அதிகரித்தது. இந்தியப் பிரதமரான மன்மோகன்சிங்உடனானஹவானா சந்திப்பு மேலும் உறவைப் பலப்படுத்தியது. இவ்வாறு இலங்கையின் வெளியுறவு அமைச்சராக ஆரம்பத்தில் பணியாற்றிய மங்களசமரவீர இந்தியாவிற்கு ஆறு தடவை விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது. 2007 இல் புதிய வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட ரோகித போகல்லாகமவும் இந்தியாவுக்கே தனது முதல் இராஜதந்திர விஜயத்தை மேற்கொண்டார்.

2006 பெப்ரவரி மாதம் ஜெனீவாப் பேச்சு வார்த்தை முறிவடைந்ததும் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான போர் ஆரம்பமாகியது. கிழக்கு மாகாணத்தினை விடுவிக்கும் இலக்கைக் கொண்டு போர் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் வெளிப்படையாகத் தந்திரோபாய நகர்வுக்கு வழிவகுத்தது.

இலங்கை அரசாங்கத்தின் அரசியற் தலை மைகளும் இராணுவத் தலைமைகளும் அரச சார்பு ஊடகங்களும் திட்டமிட்ட வெளி யுறவுக்கொள்கைகளை வெளிப்படுத்தின. அரசியல் நோக்கும் இராணுவ நோக்கும் வேறுபட்டதுபோல் இலங்கை அரசாங்கத்தின் அறிக்கைகள் வெளிவந்தன. குறிப்பாக இராணுவம் அரசியலையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இராணுவம் பற்றியும்

வாதங்கள் நிகழ்ந்தன. அதில் இந்தியாவைக் கையாளும் தந்திரத்தில் பாகிஸ்தான் -சீனா பற்றிய உரையாடலும் உறவும் வலிமையடைய ஆரம்பித்தது. இந்து சமுத்திர நாடுகளிடையே இலங்கையுடனான உறவைப் பலப்படுத்தும் போட்டிக்கான வெளியுறவுக் கொள்கைகளை மகிந்த ராஜபக்ச அரசாங்கம் கடைப்பிடித்தது. இந்தியா சிறிய ஆயுதங்களையும் சாதாரண மட்டப் பயிற்சிகளையும் இலங்கைக்கு வா; ங்கியதுடன் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைக்குமாறு கோரியது (Ministry of External Affairs in India, 2010). இதனால் இலங்கை, சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளிடம் போருக்குத் தேவையான ஆயுதக் கொள்வனவைக் கோரியது. இதனைக் கருத்திற் கொண்ட இந்தியா பதிலுக்கு இலங்கையின் ஆயுதங்கள் தொடர்பான கோரிக்கைக்கு உடன்பட்டது. இராணுவப் பயிற்சிக்கும் ஒப்புதலளித்தது. உயர் அதிகாரிகளுக்குரிய பயிற்சியும் கடற்படை, விமானப்படை, உட்பட இராணுவத்தினருக்கான பயிற்சியை இந்தியா வழங்கியது (Ministry of External Affairs in India, 2010) இராணுவப் பயன்பாட்டுக்கான ராடர் தொழில்நுட்பக்கருவிகளை இந்தியா வழங்கியது. விமானப் படைகளுக்குப் பயிற்சி அளிப்பதிலும் கவனம் செலுத்தியது. 2006 இல் சண்டிகார் விமானத்தளத்திலிருந்து ஆறு இலங்கை விமானப் படையினர் ரஷ்யத் தயாரிப்பு விமானங்களுக்கான பயிற்சியை நிறைவு செய்தனர். இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷ் வழங்கிய பேட்டி ஒன்றில் தாக்குதல் திறன் கொண்ட ஆயுதங்களை இலங்கைக்கு வழங்கக்கூடாது என்ற கொள்கை எதுவும் (இந்தியாவுக்கு) கிடையாது என்றார். (Ministry of External Affairs in India,2010) இந்தியா கடந்த காலத்தில் இலங்கை இராணுவத்தின் பதவி நிலை உயரதிகாரிகளில் 53 சதவீதமானவர்களுக்கான பயிற்சியை மேற்கொண்டது. 2007 இல் 870 பதவி படையினருக்கும் 2008 இல் 2579 பேருக்கான நுழைவுரிமைக் கோரல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும் (Ministry of External Affairs in India:2010).

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் இராஜதந்திர நடவடிக்கையைப் பற்றி குறிப்பிடுவது அவசியமானது.

போர் ஆரம்பிக்கும் போது இலங்கை - பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிடமிருந்து ஆயுதங்களைப் பெற முயற்சித்தது. அப் போது கண்காணிப்பினை மேற்கொள்ள சீனாவிடமிருந்து Jy-11 air search radars பெறு வதற்கு முயற்சித்தது. அப்போது இந்தியா அதனை நிராகரித்ததுடன் சீன பாகிஸ்தானின் ராடர்கள் இந்தியாவைக் கண்காணிக்கக் காரணமாகிவிடும் என்பதனோடு தனது தயாரிப் பான Indra air search radar ஐ இலங்கைக்கு வழங்கியது (Ministry of External Affairs in India:2010)

இதேநேரம் இந்தியா வெளிவிவகாரச் செயலாளர்களும், அமைச்சர்களும், பாது காப்புச் செயலாளர்களின் குழுக்களும் பருவ கால மழைபோன்று இலங்கை அரசைக் கையாளவும் தமிழகத் தலைவர்களைத் திருப்திப்படுத்தவும் அடிக்கடி வருகை தந் தனர். இவர்களின் அனைத்துவகை உரை யாடல்களுக்கும் இராஜதந்திர ரீதியில் பதிலளித்த இலங்கைத் தரப்பு மிகத் தந்திரமாக இந்தியாவைக் கையாண்டது. இந்தியாவிடமிருந்த விடுதலைப்புலிகள் மீதான எதிர்ப்புணர்வை இலங்கை இராஜ தந்திரிகள் பிரயோகித்துக்கொண்டனர். மறுபக்கத்தில் இந்தியாவுடன் இணங்கிப் போகும் கொள்கையினை இலங்கை அரசாங்கம் அரசாங்கம் மேற்கொண்டது. குறிப்பாக வர்த்தகம், வரித்தளர்வு, விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, கல்வி, சட்டம், குற்றவியல் போன்ற பலவிடயங்களில் உடன்படிக்கைகளை மேற்கொண்டது (Wezeman,2011) கச்சதீவு, சேதுகால்வாய் போன்ற விடயங்களில் மீனவர்களின் விருப்புக்களைத் திருப்தி செய்து கொள்வதைவிட இந்தியாவைத் திருப்திப்படுத்த பல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டது. அவ்வாறே சேதுகால் வாய்த்திட்டத்தின் அரசியல் - பொருளாதார - இராணுவ விடயங்களில் கவனம் செலுத்தாது

சுற்றுச் சூழலை மட்டுமே முதன்மைப்படுத்திச் செயற்பட்டது (கணேசலிங்கம், மற்றும் திருக்குமரன், 2006).

இலங்கை அரசாங்கம் இந்தியாவை நன்கு புரிந்தும் விளங்கியும் கையாள முனைந்தது. தொடர்பான ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் செயலாளர் லலித் வீரதுங்கா அண்மையில் ஊடகங்களுக்குத் தெரிவித்த விடயம் கவனத்திற்குரியது.

“இலங்கையின் வரலாற்றில் முதல் முதலாக இந்தியாவுடனான அணுகுமுறைக்கும் எமது நாட்டின் வெளியுறவுக் கொள்கைக்கும் மகிந்த ராஜபக்சவினால் புதிய உருவம் கொடுக்கப்பட்டது. இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பிரச்சினைகளில் இந்தியா தலையிடும்போதெல்லாம் இலங்கையின் நிலைப்பாடு என்னவென்பது குறித்து இந்தியத் தரப்புக்கு தெளிவுபடுத்துவதில்லை. இதுவே கடந்த முப்பது வருடம் இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவை சிக்கலான நிலைக்கு உட்படுத்தி இந்தியா இலங்கையை பிழையாகப் புரிந்து கொள்ள வைத்தது. இதனை மாற்றியமைத்து இந்தியாவுக்குத் தெளிவான புரிதலை ஏற்படுத்தி எமது நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் தகவல் பரிமாற்றங்களை இந்தியாவுடன் மேற்கொண்டதன் மூலம் தீர்வு காண இலங்கைத்தரப்பு தீர்மானித்தது. இந்த விடயத்தினைக் கையாள்வதற்கு இரு நாடுகளும் உயர்மட்டக் குழுக்களை நியமித்தது. அவை இரு நாடுகளுக்குமிடையில் காணப்பட்ட பிரச்சினைகளை அடையாளம் கண்டு தலைவர்களுக்குத் தெரியப்படுத்தியது” (www. Elavisin.com, 2010).

இலங்கைக்கும் இந்தியாவுக்குமான நட்பு இலங்கை அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றிபெற உதவியது. 2009 மே 19 இல் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட்டனர். அதற்கு இந்தியா, சீனா, அமெரிக்கா, பாகிஸ் தான் உட்பட அனேக நாடுகள் ஆயுத தளபாடங்களையும் இராணுவ ஆலோசனைகளையும் வழங்கி விடுதலைப்புலிகளை அழித்தனர். அப்போது தமிழக தீவிர அரசியல் கட்சிகளும் தமிழக மக்களும் இந்திய மத்திய அரசின் நடவடிக்கையைக் கண்டித்ததுடன் எதிரான பல போராட்டங்களையும் தீக்குளிப்பு நிகழ்வுகளையும் மேற்கொண்டனர். இலங்கை - இந்திய உறவைத் தீர்மானிப்பதில் எப்போதும் புதுடில்லியும் சென்னையும் முரண்பட்டுக் கொள்வதையே காணமுடிகின்றது. சென்னை அல்லது தமிழகம் இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக செயற்பட்டு வருவதையும் அதனூடாக இந்திய மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் பலத்தையும் கொண்டிருக்கின்றது. தமி;கம் மத்திய அரசில் கணிசமான செல்வாக்கைக் கொண்டிருப்பதனால் (மொத்தமாக 40 பாராளுமன்றத் தொகுதிகள் தமிழகத்தில் உண்டு) புதுடில்லி தமிழகத்தை அனுசரித்துப் போக வேண்டிய நிலை ஏற்பட்டு வருகின்றது. ஆனால் புதுடில்லி இலங்கை அரசுடன் இணைந்து போரை நிகழ்த்தியதாகவும் இறுதிக்கட்டப் போரில் பல ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு காரணம் இந்திய மத்திய அரசு இன்று தமிழக அரசியல் கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

## References


1. Bahani Mishra,Post- 1998 track II diplomacy between India and US:AN Indian perspective, Staegic Analyses, IDSA New Delhi,vol:28, No:1, Jan-Mar 2004,Pp 117- 137
2. Champika Liyanaarachchi, “Indo - Lanka ties Further Strengthened despite trade in balance” Daily mirror. August 20,2003.

3. Editorial "Shortsighted Strately" The Hindu,06.09.2002.

4. Editorial, Sri Lanka and post- tsunami structure, The Hindu, June 25,2005.

5. Farzana Begum "Growing mutuality in India - SriLanka Relations". Indian Quaterly Vol.LXI No.01,January - March 2008,p180.

6. Indian equipment, including vehicles and air defence systems, but the non deadly or non-offensive clause remained

7. Ministry of External Affairs in India," Brief of Indo - Lanka relations", http//meaindia.nk/2010 In 2007, India reacted even more strongly against increasing chinese and especially Pakistani aid and sales to Sri Lanka and offered a US$100 million loan to buy

8. News Article, "Political Column" Sunday Times ,Colombo, Sri Lanka,16,June,2003.

9. Ravi Perera, "Foreign policy, non - Alignment or pro - Economy?" Daily mirror, 9th October 2003.

10. Ferdinando,HSZs Special 'Sea Lane' and India Factor, The Island, 13 Aguest 2012.

11. Siemon T.Wezeman, "Sri Lanka Conflict Arms transfers to Sri Lanka", P.48, Jona lindberg..(Ed) Arms Trade with Sri Lanka global business, local costs. Swedish peace and Arbitration society, 2011.

12. கே.ரீ.கணேசலிங்கம் சமகால சர்வதேச அரசியல் கல்வியல் வெளியீட்டு நிலையம் யாழ்ப்பாணம். பக் 113

13. கே.ரீ.கணேசலிங்கம் மற்றும் ரி.திருக்குமரன். சேதுகால்வாய்த் திட்டம் அரசியல் பொருளாதார இராணுவ சூழலியல் நோக்கு: பிரம்மா வெளியீடு யாழ்ப்பாணம் இலங்கை 2006.

14. தமிழீழ விடுதலைப்புலிகளை இந்தியா சட்டவிரோதமான அமைப்பு என முதல்முதலில் 14.05.1992 இல் தடைவிதித்தது. கேணல் கிட்டு சர்வதேசக் கடலில் இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது கப்பலையும் அழித்து தம்மையும் தற்கொலைக்கு இட்டுச் சென்றமை 18.01.1993 இல் நடைபெற்றது.

15. 05.02.2003 யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய இந்திய முன்னாள் இராணுவத்தளபதியான சதீஸ் நம்பியார் வெளியிட்ட ஆறுபக்க அறிக்கை இலங்கைப் படைகளுக்குச் சார்பானதாக உயர்பாதுகாப்பு வலயத்தை நோக்கியது தெளிவான விடயமாகும். அவரது அறிக்கையின் சாராம்சம் 08.05.2003 வெளியிடப்பட்டது.